# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2314 - 2023 ජනවාරි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.05

*2314 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 2 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, சனவரி மாதம் 27ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023 சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



1 - B 082404 - 353 (2023/01)

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

### மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிப்பதில் (கொழும்பில் நடைபெறுகின்றது)

*கொழும்பு 10, டீன்ஸ் வீதி, இல. 400 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இனெர்ஜிநெட் ( தனியார்) நிறுவனம் (PV 6443) ஒடுக்குதல் பற்றிய விடயம் தொடர்பானது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270 உப பிரிவு XII ஒடுக்குதல் பற்றிய விண்ணப்பம்.*

*வழக்கு இலக்கம்: 64/2022/CO*
*தன்மை: ஒடுக்குதல்*
*நடைமுறை: சுருக்கம்*

*கோமார்க் இன்ஜினியர்ஸ் (தனியார் ) நிறுவனம்,*
*1 ஆவது மாடி, லக்ஷ்மன் கட்டிடம், 321, காலி வீதி, கொழும்பு -03*

*மனுதாரர்*

*குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதிமன்றத்தினால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக கொழும்பு -10, டீன்ஸ் வீதி, இல. 400 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இனெர்ஜிநெட் ( தனியார்) நிறுவனம் (PV 6443) இனால் 2022, நவெம்பர் 30 ஆந் திகதி அந்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதெனவும், அம்மனு 2023, பெப்புருவரி 15 ஆந் திகதி நீதிமன்றத்தில் முன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது எனவும், அம் மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*(செல்வி) ரங்கிகா குமாரபேலி,*
*சட்டத்தரணி,*
*இல.152/1/13, ஹல்ஸ்ரோப் வீதி,*
*கொழும்பு 12.*

**குறிப்பு**: *அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. சன்ஜேய் பொன்சேக்கா சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2023, பெப்புருவரி மாதம் 14ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு ) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*01- 22*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2023***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வியாழன் | 05.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2022 |
| | | வெள்ளி | 13.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2022 |
| | | வெள்ளி | 20.01.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.01.2023 |
| | | வெள்ளி | 27.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2023 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2023 |
| | | வெள்ளி | 10.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2023 |
| | | வெள்ளி | 17.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2023 |
| | | வெள்ளி | 24.02.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.02.2023 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2023 |
| | | வெள்ளி | 10.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2022 |
| | | வெள்ளி | 17.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2023 |
| | | வெள்ளி | 24.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2023 |
| | | வெள்ளி | 31.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2023 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*